செ.வெ.எண். 33/ஜனவரி தேதி : 18.01.2017

# தருமபுரி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 28-வது சாலைப் பாதுகாப்பு வார விழா மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 28-வது சாலைப் பாதுகாப்பு வார விழாவில் தலைகவசம் அணிவதன் அவசியம் குறித்த இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை இன்று (18.01.2017) மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பண்டிகங்காதர்,இ.கா.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சுமார் 300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று தலைகவசம் அணிவதன் அவசியம் குறித்த இருசக்கர வாகன விழிப்புணர்வுப் பேரணி தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து தருமபுரி நான்கு ரோடு வரை நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் 28-வது சாலைப் பாதுகாப்பு வார விழா இன்று (18.01.2017) முதல் 23.01.2017 வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை மூலம் நடைபெற்று வருகிறது. மேலும் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்ட வேண்டாம், புகைபிடித்துக் கொண்டு வாகனத்தை இயக்க வேண்டாமெனவும், வாகனத்தில் எரிபொருள், பிரேக் மற்றும் விளக்கு போன்ற வாகன பராமரிப்புகளை சரிபார்த்த பின் இருக்கையில் அமரவும், இருக்கையில் சரியான முறையில் அமர்ந்து வாகனத்தை இயக்கவும், ஓட்டுநருக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் ஆட்களையோ, பொருட்களையோ ஏற்றிச் செல்லக் கூடாது. கூடுதலாக ஆட்களை ஏற்றிச் செல்லக்கூடாது. வாகனத்தை பாரம் ஏற்றிச் செல்ல பயன்படுத்தாதீர். சாலையில் வளைந்து வளைந்து (Zig Zag Way) வாகனத்தை இயக்குவதை தவிர்க்கவும், நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தின் கதவுகள் திறக்கப்படுகிறதா என்பதை கவனித்து கடக்கவும், ஒரு வழிப்பாதை உள்ள இடங்களில் ஒரு வழிப்பாதையை கடைபிடிக்கவும், பாதுகாப்பான வேகத்தில் செல்லவும், வேகத்தைவிட பாதுகாப்பே முக்கியம், திரும்பும் முன் சிக்னல் செய்யவும், சாலை சந்திப்புகளில் வேகத்தை குறைக்கவும், சாலை சந்திப்பில் வலது புறத்தில் இருந்து வரும் வாகனங்களுக்கு வழி விடவும், முன்செல்லும் வாகனத்திலிருந்து போதிய இடைவெளி விட்டு செல்லவும், சிக்னல் பெற்ற பிறகே முந்தவும், வளைவுகளில் முந்த வேண்டாம், பாலங்களில் முந்த வேண்டாம், அனுமதிக்கப்பட்ட வேக அளவை மீற வேண்டாம், மருத்துவமனை, பள்ளிகள் உள்ள இடங்களில் கவனமாக செல்லவும், போக்குவரத்து சின்னங்களை மதித்து நடக்கவும், போக்குவரத்து காவலர் தரும் சிக்னல்களுக்கு கட்டுப்பட்டு சீரான வேகத்தில் செல்ல வேண்டுமெனவும், மேலும் வாகன ஓட்டுநர் சாலை விதிமுறை முறையாக பின்பற்றவும் மற்றும் நோயாளிகள் ஊர்தி, தீயணைப்பு ஊர்திகளுக்கு வழி விடவும், மழை நேரங்களில் வேகத்தை குறைந்த வேகத்தில் செல்ல வேண்டுமெனவும், வாகனத்தை இயக்கும் போது செல்போன், காது இசைக்கருவி போன்றவைகளை பயன்படுத்த வேண்டாமெனவும், மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் மூலம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த புகைப்படக்கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் திரு. கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பண்டிகங்காதர்,இ.கா.ப., அவர்கள் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. சுவாமிநாதன், கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (பொ) திரு.இரா.செந்தில்வேலன், அரசுப் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் திரு.கஜேந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.ச.முத்துக்குமார், திரு.அ.அன்புச்செழியன், திரு.ந.மணிமாறன் மற்றும் திரு.வி.சிவானந்தம், வட்டாட்சியர் திரு. சரவணன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.